மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, மூலக்கேள்விக்கும், இதற்கும் சம்பந்தம் இல்லை. மாண்மிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற இடம், கட்டிடம் போன்றவற்றை யார் அப்படி தவறாகப் பயன்படுத்துகிறார்கள் என்ற விவரம் கொடுத்தால் அதுபற்றித் தனியாக நடவடிக்கை எடுக்கலாம்

திரு. கோ. வீரய்யன்: தலைவர் அவர்களே, இந்தப் பழங்கால ஓவியங்களைப் பாதுகாக்கக்கூடிய முறையில் தஞ்சை மன்னரால் கட்டப்பட்ட ஒரு அரண்மனை திருவிடைமருதூரிலே பாதுகாப்பு அற்ற நிலையிலே கிடக்கின்றது. அதைப் பாதுகாப்பதற்குரிய நடவடிக்கையை அரசு எடுக்குமா?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, தொல்பொருள் துறை இதுபற்றி ஆராய்ச்சி நடத்தி எங்கெங்கு பழங்காலத்தினுடைய புராதனக் கலைகள், ஓவியங்கள், சுவர் ஓவியங்கள் இருக்கின்றனவோ அவைகளைப் பாதுகாக்க நடவடிக்கை எடுத்து வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் சொல்கின்ற இடம் பற்றியும் துறை உரிய நடவடிக்கை எடுக்கும்.

மதுரை மாநகர் அருள்மிகு மீனாட்சி அம்மன் கோவிலில் உள்ள "பாதாளக் கோவில்".

575—(* வினா எண் 9507) **திரு. பி. கே. எம். முத்துராமலிங்கம்:** மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரை மாநகரில், அருள்மிகு மீனாட்சி அம்மன் கோவிலைச் சார்ந்த புதுமண்டபம் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்ட "பாதாளக் கோவிலை" சுற்றுலா பயணிகள் பார்க்கத் தக்கதாக ஏற்படுத்த அரசு திட்டமிட்டுள்ளதா?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை.

திரு. பி. கே. எம். முத்துராமலிங்கம்: தலைவர் அவர்களே, மதுரையினுடைய தொன்மையை எடுத்துக்காட்டக்கூடிய இடங்கள், அமைப்புகளில் ஒன்றான இந்தச் சுரங்கப் பாதையை நம்முடைய தமிழக முதல்வர் அவர்கள் கூட வந்து பார்வையிட்

1987 மே 4]

டிருக்கிறார்கள். சுற்றுலாப்பயணிகள் பார்க்கத்தக்க வகையிலே அதை ஏற்படுத்த வேண்டும் என்ற கருத்தை ஏற்கெனவே சொல்லியிருக்கிறார்கள். இதிலே ஒரு சுரங்கம் இருப்பதாகச் சொல்கிறார்கள். நம்முடைய மீனாட்சியம்மன் கோவிலிலிருந்து அழகர் கோவில் வரை சுரங்கப்பாதை இருப்பதாகச் சொல்லப்படுகின்றது. அதைப்பற்றிய ஆராய்ச்சி மீண்டும் நடத்தப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் கேட்ட கேள்வியில் பாதாளக் கோவில் என்று குறிப்பிட்டு இருக்கிறார்கள். இங்கு பாதாளக் கோவில் எதுவும் கண்டுபிக்கப்படவில்லை. கீழே ஒரு சுரங்கம் இருப்பதாகவும், பள்ளம் இருப்பதாகவும் கண்பிடித்து இருக்கிறார்கள். ஒவ்வொரு கோவிலின் பின்புறத்திலிருந்து பல்வேறு இடங்களுக்குச் சுரங்கம் போவதாகச் சொல்கிறார்கள். இதுபற்றித் தனியாகத்தான் ஆய்வு நடத்த வேண்டும்.

திரு. பி. கே. எம். முத்துராமலிங்கம் : தலைவர் அவர்களே, கோவில் இல்லை என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் உள்ளபடியே அங்கே சிற்பங்கள் எல்லாம் இருக்கின்றன என்று உளள் சென்று பார்த்தவர்கள், அதிகாரிகள் எல்லாம் சொல்லி, அதற்குப்பின்னாலே முதல்வர் அவர்கள் கூட மதுரையிலே சென்று அதைப் பார்வையிட்டார்கள். அதிலே நியாயமான அர்த்தம் இருக்கிறது, அங்கே சிற்பங்கள் எல்லாம் இருக்கின்றன என்ற எண்ணத்திலேதான் மீண்டும் ஆராய்ச்சி செய்யப்படுமா என்றும், சுற்றுலாப் பயணிகள் பார்க்கத்தக்க வகையிலே அங்கே ஏற்பாடு செய்யப்படுமா என்றும் அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-20)

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கு ஒரு விளம்பரப் பலகை வைக்கப்படும். என்னென்ன கண்டுபிடிக்கப்பட்டன என்பதைப் பற்றி அதிலே எழுதப்படும். அங்கே ஒரு மண்டபம்தான் கீழே கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. ஏழு கிணறுக்குப் போகிற

பாதையிலே அது இருக்கிறது. நாயக்கரால் கட்டப்பட்ட அற்புத சிலைகள் அங்கு பக்கத்திலே இருக்கின்றன. அங்கு வருகிறவர்கள் அதையும் பார்ப்பதற்கேற்றவாறு விளம்பரப் பலகைகள் வைக்கப்படும்.

திரு. அ. பாலுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை அருள்மிகு மீனாட்சி அம்மன் கோயிலிலிருந்து புதுமண்டபம் வரை சுரங்கப் பாதை செல்வதாகக் கூறுகிறார்களே, அது உண்மையா? அது சோதனை செய்யப்பட்டதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி சோதனை செய்வதற்குத் தகுந்த பயிற்சி பெற்றவர்கள் இல்லை.

பாரத மாதா கோயில் கால்கோள் விழா

576—(* வினா எண் 9596) திருமதி தா. இராசாம்பாள்: மாண்புமிகு சுற்றுலா, கூலைக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தேசபந்து தாசைக்கொண்டு சுப்பிரமணிய சிவா சுதந்திரத்திற்கு முன்பு பாரத மாதா கோயிலுக்கு கால்கோள் நடத்தியது உண்மையா?

(ஆ) தேசிய ஒருமைப்பாட்டின் சின்னமாகவும், சுப்பிரமணிய சிவாவின் நினைவாகவும், தருமபுரி மாவட்டம், பாப்பாரப்பட்டியில் பாரதமாதா கோயில் எழுப்ப அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) தியாகி சுப்பிரமணிய சிவா அவர்களின் நினைவாக 1984-ல் நினைவுத்தூண் ஒன்று நிறுவப்பட்டு தமிழக அரசால் பராமரிக்கப்பட்டு வருகின்றது. அந்த இடத்தில் பாரதமாதா கோயில் எழுப்புவது குறித்து அரசின் பரிசீலனையில் இல்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS